பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
## VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 9 புதன்கிழமை (21-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 64

# ★ சகல ஆலயங்களிலும் கண்டாமணியை ஒலிக்கச்செய்து சிவராத்திரி தினத்தில் சமாதானம் வேண்டிப் பிரார்த்திக்க வாரீர்!

## இந்துசமயப் பேரவை வேண்டுகோள்

(நமது அலுவலக நிருபர்)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தம் செய்து சுமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக பிரார்த்திப்பதோடு, பௌத்த இந்து மக்களிடையே புரிந்துணர்வுவளரவும்,சிங்கள தமிழ் மக்கள் இந்நாட்டிலே சகோதரத்துவத்துடனும் தமிழ் மக்கள் உரிமைகள் பெற்று வாழ்வதற்காகவும் சிவராத்திரி தினமான இன்று பிரார்த்தனையில் ஈடுபடுமாறு இந்து சமயப் பேரவை மக்களுக்கு அறை கூவல்விடுத்துள்ளது.

இந்து சமயப் பேரவைவிடுத்துள்ள பிரார்த்தனை அறை கூவலுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் முதல்வர்கு நகுலேஸ்வரக்குருக்கள், காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுலம் அதிபர்சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் ச மகேஸ்வரக்குருக்கள் ஆகி

→10ஆம் பக்கம் பார்க்க

## 'சிவராத்திரி தினமான இந்நாளில்' இறைசக்தியை வேண்டுவோம்

### இந்துகலாசார அமைச்சு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இந்துமக்களின் மிக முக்கியமான வழிபாட்டுத் தினமான சிவராத்திரி தினத்தில் புலாலுக்காக விலங்குகளை வெட்டுவதும் விற்பனை செய்வதும் மற்றும் மதுபானவிற்பனையில் ஈடுபடுதல் என்பன தவிர்க்கப்படுவதுடன், அத்தகைய கடைகளையும் மூடி சிவராத்திரி தினத்தின் மகிமையை பேணுமாறு இந்து சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு கேட்டுள்ளது.

சிவராத்திரி தினத்தைமுன்னிட்டு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்து ஆலயங்களில் சிவராத்திரி தின வழிபாடுகளை மேற்கொள்ள சகல ஏற்பாடுகளையும்வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு தமிழர்விவகார இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

கீரிமலை சிவன் கோவில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் மற்றும் நாட்டி

←10ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் தமிழ்மக்களின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை, தேசியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தி நேற்று பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை பெரும் எடுப்பில் உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தது.

காலை 9-30 மணிக்குவளாக முன்றலில் அமைக்கப்பட்டவிசேடமேடையில் சுதந்திரதீபம்ஏற்றுதலுடன்எழுச்சி நிகழ்வு ஆரம்பமாகியது.

வளாகச் சூழல் எங்கும் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளால் அலங்கரித்து பதாதைகள் வாயில்கள் தோறும்கட்டப்பட்டிருந்தது.

'அரசே யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்து,

'தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை, தேசியத்துவம் என்பவற்றை உள்ளடக்கி அரசியல் தீர்வை ஏற்படுத்த முயற்சி செய்'

→10ஆம் பக்கம் பார்க்க

## சமாதானம் வேண்டி சுதுமலையில் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானம் வேண்டி இன்று சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பிரார்த்தனை வைபவம் இன்று இடம்பெறவுள்ளது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.வினாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இப்பிரார்த்தனைவைபவத்தில் இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், இந்து சமயப் பேரவை உப தலைவர் ஆ. மகாலிங்கம், பேரவைச் செயலர் சி.சக்திகிரீவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## கீரிமலைக்கு செல்ல விஷேட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் முக்கியதினமான சிவராத்திரியைமுன்னிட்டு கீரிமலைநகுலேஸ்வரர் ஆலயத்திற்குபக்தர்கள் செல்வதற்கு விசேடபோக்குவரத்துச்சேவையினை வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஏற்பாடு செய்துள்ளது:

→ 10ஆம் பக்கம் பார்க்க

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு கனடா ஆதரவு

(கனடா)

இலங்கையின் இனவிவகாரத்தில் நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளை கனடா ஆதரிப்பதாக அந்நாட்டின் சர்வதேச ஒத்துழைப்பிற்கான அமைச்சர் திருமதி மரியமின்னா தெரிவித்துள்ளார்.

கனடா நாட்டின் அமைச்சர் ஒருவர் நோர்வே நாட்டின் முயற்சிகள் தொடர்பாக அபிப்பிராயம் வெளியிட்டது

→ 10 ஆம் பக்கம் பார்க்க

## ஜே. வி. பி ஏற்காது

(கொழும்பு)

நோர்வேயின் சமாதான முயற்சியை தாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என ஜே வி பி ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளை ச்சந்தித்துத் தெரிவித்துள்ளன.

இலங்கயில் இருப்பது இனப்பிரச்சனை அல்ல நாட்டைப் பிரிக்கும்பிரச்சினையே இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளது. (வ)

## ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு கீரிமலை நகுலேஸ்வரக் கோயிலில் நடைபெறும் விஷேட பூஜையில் கலந்து கொள்ளும் பக்தரின் நன்மை கருதி இன்றுஇரவு10.00மணி வரையில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும்.

அதேவேளை இரவு 10.00 மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்குச் சட்டம் நாளை

→ 10ஆம் பக்கம் பார்க்க

## இலங். சகல உதவிகளையும் பாகிஸ்தான் வழங்கத் தயார்

(கொழும்பு)

இலங்கையின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் வகையில் இலங்கை அரசிற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்க பாகிஸ்தான் அரசு தயாராக இருப்பதாக அதன் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்குத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் கதிர்காமர் ஜெனரல் முஷா

→10ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திர தீபம் ஏற்றப்பட்டு யாழ். பல்கலையிலும் பொங்கு தமிழ்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு பல்கலைக்கழக சமூகத்தால் நேற்று நடத்தப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப் பட்ட பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகியது:

சுதந்திர தீபம் ஏற்றலுடன் இவ் எழுச்சி நிகழ்வு ஆரம்பமாகியது, பல்கலைக் கழகபதில் துணைவேந்தரும் விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் சுதந்திர தீபத்தை ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து மாணவர்களும் மெழுகுவர்த்தித் தீபங்களை ஏற்றினர்.

வளாகப்பகுதியெங்கும் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளால் அலங்கரித்து புரட்சிக் கீதங்களும் இசைக்கப்பட்டது.

''அரசே தமிழர்களின் சுயநிர்ணயஉரிமையை அங்கீகரி'' ''சுயநிர்ணய உரிமை, மரபு வழித்தாயகம் என்ற அடிப்படையில் புலிகளுடன் பேச்சில் ஈடுபடு'' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாதைகளும் வளாகச் சூழலில் காணப்பட்டன.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை ஆதரித்து பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் ஆர். குமாரவடிவேல் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்

(10-ம் பக்கம் பார்க்க)

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின்**

முயற்சியினால் யாழ். மக்களுக்கு கணனிக் கல்வியை பரவலாக்கும் நோக்கோடு

இந் நிறுவனம் ஆரம்பிக்கப்படுகின்றது.



# Information Technology Park

**Ministry of Development Rehabilitation And Reconstruction**

**of the North And Tamil Affairs North East**

**272, Stanley Road, Jaffna, Sri Lanka.**

# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

## 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

**யாழ்ப்பாண மாணவர்களுக்கு கணனித் துறையில் அரச சான்றிதழ்**

யாழ். மாவட்ட மாணவர்களின் நலன் கருதி எல்லோருக்கும் கணனிக் கல்வியை பரவலாக்கும் நோக்கோடு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் கீழ் IT PARK எனும் அரச சார் நிறுவனமொன்றை மிக விரைவில் ஆரம்பிக்க இருக்கின்றோம் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம். முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டுள்ள இந் நிறுவனம் முற்று முழுதிலும் சேவையையே நோக்கமாகக் கொண்டதாகும்.

இந்நிறுவனத்தின் சேவைகளில் சில:

1. Cyber Kaddai (இணைய சேவை)
யாழ்ப்பாணத்தில் இணையச் சேவையினை (Inter Net Services) எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும் வண்ணம் மிகக்குறைந்த கட்டணத்தில் இணையச்சேவையை வழங்கும் திட்டம்.

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஒரு மணித்தியாலம் | - | 70 ரூபா |
| 30 நிமிடம் | - | 50 ரூபா |
| 15 நிமிடம் | - | 30 ரூபா |

2. Cyber Kids (சிறுவர் விளையாட்டுப் பகுதி)
பாடசாலைச் சிறார்களுக்கு (வயதெல்லை) 6-12 கணனிக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டம் இதுவாகும். ஆரம்பகட்டமாக இத்திட்டத்தில் இணைபவர்களுக்கு கணனி சம்பந்தமான அறிவு, விளையாட்டுக்கள், ஏனைய அடிப்படை விடயங்கள் கற்பிக்கப்படும். இதில்

1 Computer Fundamentals
2. Computer Games
3. Multimedia

என்பன உள்வாங்கப்பட்டிருக்கும்

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஒரு மணித்தியாலம் | - | 30 ரூபா |
| 30 நிமிடம் | - | 20 ரூபா |
| 15 நிமிடம் | - | 10 ரூபா |

3. IT Training Centre

(தகவல் தொழில் நுட்ப பயிற்சி நிலையம்)
கணனித் துறையில் பல வருட அனுபவமுள்ள விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவையில் நவீன திரைப்படக் கருவி (Projectors) ஊடாக விளக்க வகுப்புக்கள், போதியளவு செய்முறைப் பயிற்சிகள் என்பன இடம் பெறும்.

பயிற்சி நெறி

கணனி சம்பந்தமான சகல விதமான பயிற்சி நெறிகளும் இங்கு கற்பிக்கப்படும்.

| Courses | Dura'ion | Fee |
|---|---|---|
| 1. Application Packages | 2 Months | 700/- |
| 2. Programming Languagees | 3 Months | 1500/- |
| 3. Computer Hardware | 3 Months | 1500/- |

4. IT Library (தகவல் தொழில் நுட்ப நூல் நிலையம்
தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அனைத்துப் பாட நூல்களையும் சி. டி. தட்டுக்களையும் உள்ளடக்கியது. ஆர்வமுள்ள அனைவரும் இதில் அங்கத்தவராகப் பதிவு செய்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

5. Amusement Park (பொழுது போக்கும் பகுதி)
இப் பொழுதுபோக்கும் பகுதியில் அகலத் திரையில் உலக சம்பந்தமான விளையாட்டுக்கள் (Sports), உலக செய்தித் தாபனங்களின் செய்திகள் (World News) அத்துடன் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் (Video Games) என்பவற்றில் அங்கத்தவர்கள் எவ்வித கட்டணமுமின்றி இணைந்து கொள்ளலாம்.

6. Sales Centre (விற்பனைப் பகுதி)
நியாய விலையில் கணனி உதிரிப்பாகங்கள், கணனி சம்பந்தமான பாடநூல்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. IT Services (தகவல் தொழில் நுட்ப சேவைகள்)
தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைகள் அனைத்திற்கும் தகுந்த ஆலோசனைகளையும் ஏனைய சேவைகளையும் இந் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

8. Self Training (சுய முயற்சியில் பயிலல்)
கணனித் துறையில் பயிற்சி பெற்றவர்கள் உங்கள் மேலதிக தேவைகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்வதுடன் உங்கள் கணனி அறிவையும் மேம்படுத்திக் கொள்ளலாம்.

9. Hardware Division (வன்கூற்றுப் பிரிவு)
(Hardware) சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதுடன் கணனி சம்பந்தமான சகல தொழில் நுட்ப திருத்த வேலைகள் போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.


10. Software Development Division
(மென்கூற்றுப் பிரிவு)
ஆர்வமுள்ளவர்கள் எமது மேற்பார்வையின் கீழ் ஆலோசனைபெற்று சுயமாக Software ஐ Development செய்து கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:**

Chief Controller
IT PARK , Jaffna.

(கி-1512)

# மஹா சிவராத்திரி சிறப்பிதழ்-2001



## மறைபொருளாய் விளங்கும் முழுமுதற் கடவுள்

## சிவலிங்க வடிவிற் காட்சியளித்த சிவராத்திரி

சிவபரம் பொருளையே முழுமுதற் கடவுளாக கொண்டொழுகும் சைவர்களுக்கு மிக முக்கியமான விரதம் சிவராத்திரியாகும். லௌகிக இன்பங்களை மட்டும் இச்சித்து வழிபடுவதன்றி ஆன்ம லாபத்தை நாடி நிலையாமையை உணர்ந்து இம்மை மறுமை என்ற இருமைக்கும் பயன்தரும் இந்த மஹாசிவராத்திரி விரதத்தைக் கைக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு சைவ சமயத்தவரதும் கடமை. சிவராத்திரி விரதத்தை யாதொரு பலனையும் விரும்பாதவரும் வைஷ்ணவருங்கூட அனுஷ்டிக்க வேண்டுமென்று கருட புராணம் முதலிய பல புராணங்கள் கூறுகின்றன.

மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசியிலே சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப் படுகிறது. பகல் திரயோதசியிலிருந்து இரவு சதுர்த்தசி வியாபித்திருத்தல் விசேஷமானது திரயோதசி சக்திஸ்வரூபம் சதுர்த்சி சிவஸ்வரூபம் பாரணையின் போதும் சதுர்த்தசி இருக்குமாயின் நன்று.

### நான்கு வகை

மாத சிவராத்திரி என்ற பெயரில் மாதந்தோறும் சிவராத்திரி விரதங்கள் வருகின்ற போதும் அவை அனுஷ்டிக்கப்படுவது குறைவு. நான்கு வகையான சிவராத்திரிகளைப் பற்றி உபதேச காண்டம் கூறுகிறது அமாவாசையும், சோமவாரமும் கூடிய தினத்தில் வருவது யோக சிவராத்திரி. மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்தசியில்

**கு. விஜயகுமார்**

வருவது மாதசிவராத்திரி, மாசிமாதம் வளர்பிறைப் பிரதமை முதல் தேய்பிறைத் திரியோதசி வரை பகலில் மட்டும் உணவருந்தி மறுநாள் சதுர்த்தசியில் அதாவது மஹா சிவராத்திரி விரதநாளில் உபவாசமிருந்து நித்திரை விழித்தல் மூன்றாவது வகை மஹாசிவராத்திரி நான்காவது.

### புராணங்களில்

திருநந்தி தேவரிடம் இவ் விரதத்தை உபதேசமாகப் பெற்றுச்சூரியன், முருகன், விஷ்ணு, பிரம்மா, மன்மதன், யமன், இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் ஆகியோர் கைக்கொண்டு பல்வேறு வரங்களைப் பெற்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

ராஜசேகர பாண்டிய மன்னன் வெள்ளியம்பலத்தில் சிவபெருமானுக்குச் சிவராத்திரியில் நான்கு யாமப் பூஜைகளையும் மிக விசேடமாகச் செய்வித்து தொடர்ந்து ஒரே காலை ஊன்றி ஆடக் கால் நோகுமே என்று வேதனை கொண்டு இறைவனை வேண்டிக் கால் மாறி ஆடச் செய்து பேரானந்தமடைந்தார் என்று திருவிளையாடற் புராணம் கூறும்.

சிவபிரானே உமாதேவியாருக்கு உபதேசித்த இவ் விரத மகிமையைச் சூத புராணிகர் ஏனைய முனிவர்களுக்கு எடுத்துக் கூறுவதாகபுராணங்கள் கூறும்.

[4ஆம் பக்கம் பார்க்க]

## சிவராத்திரி தினத்தில் சமாதானம் வேண்டிப் பிரார்த்தனை

இந் நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போர் ஓய்ந்து சமாதானமும், சுபீட்சமும் சகவாழ்வும் மிளிர வேண்டி யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையால் சிவராத்திரி தினத்தில் முழுநாள்ப் பிரார்த்தனை நடைபெற ஏற்பாடாகியிருப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்தப் புனித பிரார்த்தனையில் அனைவரும் திரிகாண சுத்தியோடு பங்கு கொண்டு சிவபிரானைத் தியானிக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## ஒளிவளர் விளக்கு

பசித்தோர்க்கு, கதியற்ற அகதிகளுக்கும் கஷ்டமுடையோருக்கும் தம்மாலியன்ற உதவி, செய்வது சிறந்தது தக்கதருணத்தில் துணைபுரிவது தான் சைவத்தின் சீலம். எத்தனை இந்து சமய ஸ்தானங்கள் இரும்பினும் அந்த அந்த ஸ்தாபங்கள் தம்மாலியன்ற சேவையைச் செய்து வருவது பாராட்டத்தக்கது.

சமயப் பேரவைகள் இந்த சிவராத்திரி நாளில் செய்து வரும் சிறந்த பணிகளைப் பாராட்டுகிறோம். அவற்றை ஆதாரமாகக் கொண்டு சிவம் வளர்க்கும் தெய்வ மக்களை ஆசீர்வதிக்கிறோம் எல்லாம் சிவமயம் - சிவனாகிய ஒளிவளர் விளக்கு எம்மவர்க்குச் சாந்தி சமாதானம் உண்டாக்கி நிம்மதி தருவதாக.

சுபம்

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**
**தலைவர்**
இந்து சமயப் பேரவை


அழகுக்கு அழகூட்டும் அலங்கார தங்க நகை ஆபரணங்களை
22 கரட்டில் குறித்த தவணையில்
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**ஸ்ரீ வாணி நகை மாடம்**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1441]

மங்கையர் மனம் கவரும்
மங்காத அசல் 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள
சிறந்த நகையகம்

**மகாநதி ஜுவல்லறி**

**72 A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[கி-1440]

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்கநகைகளை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1442]

அழகு நங்கையரின் அழகிற்கு
மெருகூட்டும் நவீன அழகிய
தங்க ஆபரணங்களை அசல் 22 கரட்
தங்கத்தில் உத்தரவாதத்துடன்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய நகையகம்

**ஜெய கிருஷ்ணா**
**ஜுவல்லர்ஸ்**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

158, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-1444]

உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**நியூ லலிதா ஜுவலர்ஸ்**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-1443]

# மஹா சிவராத்திரி சிறப்பிதழ்-2001

## மறை..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அக்கினிப் பிழம்பு

ஒரு சமயம் படைப்புக் கடவுளாகிய நான்முகனும் காத்தற்கடவுளாகிய திருமாலும், தாம்தாமே பெரியவரென்று தம்முள் வாதிட்டு நின்றனர். இவ்வேளை அவர்களருகே ஓர் அக்கினிப் பிழம்பு தோன்றியது. இவ்வக்கினியின் அடியையாவது முடியையாவது கண்டு வருபவனே பெரியவன் என்று ஓர் அசரீரி முழங்கியது.

உடனே பிரம்மா அன்னப்பட்சியாகமாறி வானத்தில் பறந்து முடியைத் தேடிப்புறப்பட்டார். விஷ்ணு பன்றிவடிவெடுத்து நிலத்தைத் தோண்டி கீழே புகுந்து அவ்வக்கினியின் அடியைத் தேடிப் புறப்பட்டார் நீண்டகாலம் முயற்சித்து முடியாமல் தோல்வி கண்டு இருவரும் திரும்பினர். தாம் வெறும் கருவிகளேயென்றும், தம்மை இயக்கும் ஒரு மேலான பரம்பொருள் உண்டு என்றும் அதுவே சிவபரம்பொருள் என்றும் உணர்ந்து அவ்வக்கினிக் கொழுந்தின் முன் அவர்களிருவரும் மண்டியிட்டு நின்றனர். அவர்கள் செருக்கையடக்கிய சிவபிரான் அவர்களுக்கு அருள்புரிந்ததுடன், அந்தச் சோதி வடிவம் தோன்றிய நாளைச் சிவராத்திரி விரத நாளாக அனுஷ்டிக்குமாறும் கூறினார்.

### விரத விதிமுறைகள்

இவ்வித மகிமை பொருந்திய நாளில் முறைப்படி நித்திய கர்மாதுஷ்டானங்களைச் செய்து சிவாலயம் சென்று உபவாசமிருந்து இரவு முழுவதும் நித்திரை விழித்து சிவநாமபஜனை பஞ்சாஷரஜபம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்து. மறுநாள் அதிகாலை நித்தியகரும்மம் முடித்து எட்டரை மணிக்கு முன் பாரணை செய்வது விதியாகும்.

### நான்குயாமப் பூஜை

சிவராத்திரிஇரவு நான்கு யாமமும் சிவபூஜை சிவழிபாடு அவசியம். நான்கு யாமப் பூஜைகளும் அவ்வக் காலத்தில் செய்வது உத்தமம். ஒரே காலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம். நான்கு யாமப் பூஜைகளின்போது பரிவாரபூஜைகளில் விநாயகருக்கும் சண்டேஸ்வரருக்கும் மட்டும் பூஜை செய்தால் போதும். ஏனைய பரிவாரங்களுக்குப் பூஜை அவசியமில்லை.

### லிங்கோற்பவம்

இரவு பதினான்கு நாளிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலம். அதாவது சுமார் 11.30 மணிமுதல் 12.15 மணி வரையிலான காலம் லிங்கோற்பவ காலமாகும் இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள லிங்கோற்பவகாலம் முடியும் வரையாவது விழித்திருத்தல் நன்று.

### விரதமகிமை

மஹா சிவராத்திரி விரதத்தைப் பற்றிப் பேசுபவருக்கு யமபயமில்லை. பல யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பது மிகவும் புண்ணியமாகும். சிவராத்திரி விரகத்தால் கிடைக்கும் நற்பயன் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடினாற் கூடக்கிட்டாது சிவராத்திரிக்கு ஒப்பான வேறு சிறந்த விரதமில்லை என்று பரமசிவன் பார்வதிக்கு இவ்விரதம் பற்றி எடுத்துரைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

இவ்விரதம் இருபத்து நான்கு வருடங்கள் அல்லது டன்னிரெண்டு வருடங்கள் அல்லது ஆறு வருடங்களாவது தொடர்ந்து அனுஷ்டித்தபின் முறைப்படிவிரதம் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

''மறைகளிற் சாமம் மகங்களிற் புரளி
மகப்; மலைகளில் மகமேரு
திறைபுனல் நதியிற் கங்கை ஓர் ஐந்தாய்
நிகழ்ந்த பூகத்தில் ஆகாயம்
முறைதெரி சுரரிற் கருமுகில் ஊர்தி
முதன்மைபெற் றுயர்ந்ததே போல
அறைதரு விரதம் அனைத்தினும் உரைக்கும்
அரன்இரவு அதிகம் என்றறிமின்''

''முத்தியினை விரும்பிமுற்ற சங்கமற்பம்
தவறாது மூவெட்டாண்டு
பக்தியுடனில் விரத நோற்ற தன்பின்
வேதியர்க்குப் பசுப்பூ தான
நித்தில்வெண் ணகக்கன்னி காதான
மன்னமுடனிதா நல்கி
புத்தியுடன் சிவநிசியாம் விரதமொழிவது
வழக்காப் புகல்வன் மன்னோ''

## மகா சிவராத்திரி தினத்தில் சமாதானம் வேண்டிப் பிரார்த்திப்போமாக

இப் புனிதமான நன்னாளில் போர் நிறுத்தம் ஒன்று கூடிய கெதியில் வந்துநாட்டில் சாந்தி சமாதானம் சுபீட்சம் உண்டாகி ஆலயங்களும் நித்திய நைமித்திய பூஜைகள் மஹோற்சவங்கள் நடைபெற்று நாம் அனைவரும் மனச் சாந்தியுடன் இன்புற்று வாழ சிவராத்திரியன்று ஒன்று சமய பேரவை எடுத்திருக்கும் முயற்சியை பாராட்டுகிறேன்.

**கு. நகுலேஸ்வரக் குருக்கள்**
நகுலேஸ்வரம், கீரிமலை.

யாழ். நகரில் என்றும் மங்களகரமான நிகழ்வு என்றால்

எல்லோரின் ஞாபகத்துக்கும் வரும் "சுப்பஸோ"

ஏற்கனவே அறிமுகப்படுத்தியிருந்த Data Video Cd Recorder மூலம் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகள் எதுவானாலும் அதனை என்றும் மாறாப் பொலிவுடன் வீடியோ CDயில் பதிவுசெய்திடவும்.

(உங்கள் படங்களுடனும் பல வண்ண முகப்புக் கவருடனும்)

பழைய, புதிய சினிமா, பக்திப் பாடல்களை நீங்கள் தெரிவு செய்யும் முறையில் Stereo நயத்துடன் ஓடியோ CDயில் பதிவு செய்திடவும் பல ஆண்டுகளுக்கு முன் உங்கள் இல்லங்களில் நடைபெற்ற நிகழ்வுகளின் வீடியோகசற்றுக்களை சுத்தம் செய்து CDயில் பதிவு செய்திடவும்.

சுப்பஸோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1445)

## தேவாலயத்தில் தாக்குதல் மூவர் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் நுவரவத்தை எனும் பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் கடந்த ஞாயிறன்று ஆயுத தாரிகளால் தாக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் ஏந்திய குழுவினர் தேவாலயத்தில் பூசை நடந்த நேரம் உட்புகுந்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்கியதுடன் தேவாலயத்திற்கும் சேதம் விளைவித்துள்ளார்கள்.

தாக்குதலுக்கு இலக்கான மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று இது வரையும் கண்டு பிடிக்கப்படவில்லை. [உ-9]

## நாற்று மேடைகளில் நோய்த் தாக்கம், பயிர்ச் செய்கையில் பின்னடைவு

(கல்வயல்)

அண்மையில் பெய்த மழை காரணமாக தக்காளி, மிளகாய்பீற்றூட், கத்தரி நாற்று மேடைகள் முளைதிறன் குறைந்தும், அழுகல் பூஞ்சணம் நோய்த்தாக்கங்களிற்கு உட்பட்டதாலும் உரிய நேரத்தில் மேற்படி பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை எழுந்துள்ளது

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி பகுதி விவசாயிகள் இதனால் பெரிதும் அவதியுறுகின்றனர்.

புதிதாக நாற்றுமேடைகளை ஆக்கி பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதாயின் போகம் தப்பிவிடும் நிலை காணப்படுகிறது.

இந் நிலையால் எதிர்காலத்தில் மரக்கறி வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடும், விலையேற்றமும் ஏற்பட வாய்ப்பேற்பட்டுள்ளது. (உ-111ப)

## முகாம்மக்கள் முறைப்பாடு

வவுனியா பூந்தோட்ட 8 ஆம் யூனிற் அகதிமுகாமிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர், மனிதாபிமானமற்ற முறையில் தம்மிடம் நடந்து கொள்வதாக அம் முகாமில் வசிக்கும் மக்கள் மனிதஉரிமை ஆணைக்குழு அதிகாரி எஸ். ரவீந்திரனிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (உ-7)

## கதிரைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு, தென்னிந்திய திருச்சபையின் ஆயர் வண ஜெபநேசன் அடிகளினால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் ஒரு தொகுதி கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரி மண்டபத்தில் உபபீடாதிபதி பா. தனபாலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதனிடம் ஆயர் ஜெபநேசனினால் இக்கதிரைகள் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்பட்டன. (உ-14)

## இராசி பலன்

21-02-2001
(மாசி 09 புதன்)
திரியோதசி மு.ப 10.04 வரை
திருவோணம் பி.இ 3.10 வரை
இராகுகாலம் 12.31-2.01
சுபநேரம் 5.01-6.31
மகாசிவராத்திரி விரதம்.

**மேடம்**
முயற்சி கைகூடும், நன்மை விருத்தி, மேன்மை, தொழில் சிறப்பு.

**இடபம்**
உடல் உபாதை, பிரயாணம், காரிய ஜெயம், சுதந்திரக் குறைவு.

**மிதுனம்**
உறவினர்வெறுப்பு திடீர்ப் பிரச்சினை, வியாதி, காரிய தாமதம்.

**கடகம்**
காரியம் கைகூடும், வாகன வசதி, நல்ல உணவு கிடைத்தல், தனவரவு.

**சிங்கம்**
பகைவர் விலகுவர், முயற்சி விருத்தி, உடல் நலம், தனவரவு.

**கன்னி**
பிரயாண தாமதம், சொத்துக்களால் கவலை, வியாதி, முயற்சி தாமதம்.

**துலாம்**
உறவினர் மனஸ்தாபம், தடுமாற்றம், காரியதாமதம், வியாதி.

**விருச்சிகம்**
காரியம் கைகூடும், இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, பணவரவு.

**தனுசு**
பொருள் விரயம், விதண்டாவாதம், காரிய தாமதம், மனஸ்தாபம்.

**மகரம்**
ஆழ்ந்த சிந்தை, உடல் நலம், போசனசுகம், முயற்சி வெற்றி.

**கும்பம்**
பொருள் விரயம், பிரயாணம், பிதா சிந்தை, முயற்சி தாமதம்.

**மீனம்**
மன மகிழ்ச்சி, கௌரவம், முயற்சி கைகூடும், தனலாபம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## விசேட சொற்பொழிவு

உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் சிவராத்திரி தின விசேட சொற்பொழிவு, தியானம் ஆகியவை இடம் பெறவுள்ளன. [உ-]

# செய்தித் துளிகள்

## விதை உற்பத்தி கூட்டுறவு நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விவசாயிகளுக்கு தேவையான தரமான விதைகளை வழங்குவது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விதை உற்பத்தி கூட்டுறவு நிறுவனம் ஒன்று அமைப்பதற்கு பல்கலைக் கழக விவசாய பீடமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து திட்டமிட்டுள்ளன.

(உ-03)

## விஷமிகள் கைவரிசை

(ஈச்சமோட்டை)

மூளாய் வீதி கணேச வாசிகசாலையில் சிலர் திட்டமிட்ட கைவரிசையை நடத்தி வருவதாகத் தெரிய வருகின்றது.

சில தனிப்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாகவே ஊர் மக்கள் பயன் பெறும் வாசிகசாலையில் இடப்படும் பத்திரிகைகளைக் கிழித்தும், வாங்கு மேசைகளைச் சேதப் படுத்தியும் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகத்தெரிய வந்துள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் குறிப்பிட்ட அவ்விஷமிகளை இனங்கண்டு சட்டத்திற்கு முன் நிறுத்த முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

(உ)

## இந்தியா மறுப்பு

(கொழும்பு)

சமாதானத்திற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்ற போது அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பைக் கண்காணிப்பதற்கு அமைச்சப்படவிருக்கும் கண்காணிப்புக் குழுவில் ஜப்பானும், பிரிட்டனும் இடம் பெறுவதை இந்தியா விரும்பவில்லை எனும் செய்தியை இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது. (செ)

## கட்புலசாதன போட்டி

[யாழ்ப்பாணம்]

வலய மட்ட, வரலாறும் சமூகக்கல்வியும் கட்புல சாதனங்கள் போட்டியும் கண்காட்சியும்இம் மாதம் 23 ஆம் திகதி யாழ்/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

கட்புலசாதனம் 6-11 வரையான வகுப்புக்களுக்கு உகந்ததாக இருப்பதுடன் நீண்ட கால பயன்பாடு உடையதாகவும் வரலாறு, சமூகக்கல்வி ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.

(உ-12)

## அனுமதி அட்டை அனுப்பி வைப்பு

[கல்வியங்காடு]

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் சிறு வணிக முகாமைத்துவ இறுதிப் பரீட்சை எதிர் வரும் 24 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கான அனுமதி அட்டைகள் கொழும்பு தலைமை அலுவலகத்தினால் அனுப்பப்பட்டுவிட்டதாகவும், அனுமதி அட்டைகள் கிடைக்காதோர் யாழ் பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் இயக்குநர் எஸ். எ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட இறுதிப் பரீட்சையில் சித்தியடைய தவறியவர்களும் இப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

(உ-54)

## மகா சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு சாந்தி லிங்க சுவாமி கோயிலில் மகா சிவராத்திரி விழா நான்கு ஜாம பூஜை வழிபாடுகளுடன் இடம் பெறவுள்ளது.

இதனையொட்டி சிவராத்திரி தினத்தன்று மாலை 3 00 மணி முதல் டாற்செம்பு எடுத்தல் நிகழ்வும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (உ)

## சிவராத்திரி பூஜை

(யாழ்ப்பாணம)

நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலய மகா சிவராத்திரி விழா வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் நான்கு சாமப் பூஜைகளும் அபிஷேக ஆராதனைகளுடன் இடம் பெறுவதுடன் மறு நாள் காலை சமுத்திர தீர்த்தம் நடைபெறும். (உ-04)

## சிவராத்திரி பூஜை

(இணுவில்)

இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(உ-49)

## வலயமட்ட போட்டிக்கு தெரிவு

[ஆனைக்கோட்டை]

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில்,

17 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்கள் பிரிவு, 19வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்கள் பிரிவு ஆகியவற்றில் யா/ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று வலய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (உ-125)

## காற்றாடியால் காயம்

(யாழ்ப்பாணம்)

நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருந்தவரின் தலை, காற்றாடிக்குள் சிக்குண்டதால் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்முகநாதன் சந்திரகுமார் [வயது 18] என்ற இளைஞரே மங்கள நிகழ்வொன்றில் நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருந்த வேளை அருகில் இயங்கிக் கொண்டிருந்த காற்றாடியில் தலை முட்டியபோது காயமடைந்தவராவார்.

[உ-12]

## பனிப்புயல்

(ரொறண்ரோ)

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா எனுமிடத்தில் வீசிய பனிப்புயலால் மலை ஏறிக் கொண்டிருந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவ் இருவரும் சுவீடன் மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-9)

## தீக்காயம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் அடுப்பு தவறிவிழுந்ததனால் சுண்டுக்குளியை சேர்ந்த மரியாப்பிள்ளை யூஜியஸ் (வயது-54, என்பவர் உடலில் பல பாகங்களிலும் எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

# செம்மணிப் புதைகுழி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு விரைவில் நஷ்ட ஈடுவழங்கப்படும்?

[யாழ்ப்பாணம்]

செம்மணிப் புதைகுழிச் சம்பவத்தில் இறந்தோரென அடையாளம் கபணப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடுபெற்றுக் கொடுக்கப்படுமென்று ஈ. பி டி. பி, யாழ்மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் எஸ் தவராஜா தெரிவித்துள்ளார். செம்மணிப் புதைகுழிதோண்டப்பட்டு மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் மரபணுப்பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மரபணுப் பரிசோதனையின் பின இறந்தவர் அடையாளம் காணப்பட்டு அவரது குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு விரைவில் அமைச்சு அனுமதியைத் தருமென்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதே வேளை பலாலியிலியிருந்து இரத்மலானைக்கு பயணம் மேற்கொண்டு விமான விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தவர்களுக்கு இதுவரை எவ்வித மான நஷ்டஈடும் வழங்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## முன்பள்ளி விபரங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய்க்கோட்டங்களிலுள்ள முன்பள்ளிகளில் புதிதாகப்பதிவுசெய்யப்படவேண்டிய முன்பள்ளிகளின் விபரம் 4,5வயது மாணவர்களின் எண்ணிக்கை முன்பள்ளிகளை நடத்தும் நிறுவனங்களும் அவைநடத்தும்முன்பள்ளி பாடசாலைகளின் விபரங்களையும்.

எதிர் வரும் 25ந்திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாண வலயமுன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறுயாழ்வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார். (ந)

## யாழ். மாவட்ட உதைபந்தாட்டக் குழுப் பயிற்சி முகாம் ஆரம்பம்

[சுண்டுக்குளி]

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிக்கு 22 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஈ ஆனலட தர்மகுலநாதன் செல்வஸ்ரர், எல. அனுராதன், சபாசூனன், கருணானந்தன். சுரேந்திரன் பாபு, செல்ரன், ஏ மாசல், ஜெயேந்திரா, அநந்தன் கெவின், அருள்பிரகாஸ், அரவிந்தன், சுரேஸ், நெல்சன் கோகுலன் திரன் வைகுந்தன் றோயல் ஒலறெற், எடிசன் ஆகிய தெரிவுசெய்யப்பட்ட 22 பேரையும் இன்று தொடக்கம் 24ஆம்திகதி வரை இடம் பெறவுள்ள பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்குஏதுவாக இன்று தவறாது உரிய இடத்திற்கு சமுகமளிக்கும்படி மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேசமயம், இன்று 4.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இவர்களுக்கு முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது

(உ110)

## கைதடிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட கைதடிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களின் நலன்களைக் கவனிக்கவும் தேவையான நடவடிக்கைகளைஎடுக்கவும்உள்ளூர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் விஷேட கூட்டம் யாழ். செயலகத்தில் நடை பெறவுள்ளது.

எதிர் வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள இக்கூட்டத்தினை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு -கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

இதுவரை கடந்த 14ம்,15ம் திகதிகளில் கோப்பாய் வீதியூடாக சென்று ஆயிரத்து 161 குடும்பங்கள சொந்த விருப்பத்தின் பேரில் கைதடியில் மீளக்குடியமர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதடிப் பிரதேசத்தில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளில் கைதடி வடக்கில் 104 குடும்பங்களும் கைதடிகிழக்கில் 249 குடும்பங்களும் கைதடி மத்தியில் 207 குடும்பங்களும் கைதடி மேற்கில் 243 குடும்பங்களும்கைதடி தென்கிழக்கில்129 குடும்பங்களும்கைதடி மேற்கில் 229 குடும்பங்களும் இதுவரை மீளக்குடியமர்ந்துள்ளன.

(உ)

## சிறுவர் உரிமைகள் பற்றிய கருத்தரங்குகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் தோறும், சிறுவர் உரிமைகள், தொடர்பான கருத்தரங்குகள் இடம் பெற்று வருகின்றன.

இன்று மு. ப. 10. 00 மணிக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் ஜே. 41, ஜே. 45, ஜே 46, ஜே 48. ஆகிய கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் மாவட்ட மட்டப்பயிற்சியாளர்கள் கருத்துரைகளை வழங்கவுள்ளார்கள்.

(செ-75)

## வளைகுடா நாடுகளுக்கு செல்லும் பெண்களுக்கு அரபு மொழியறிவு தேவை

(கொழும்பு)

வளைகுடா நாடுகளுக்குப் பணிபுரியச் செல்லும் இலங்கைப் பெண்கள் அரபு மொழியில் தேர்ச்சி பெற்றவராக இருந்தால் எதிர்நோக்கும் அதிகமான கஷ்டங்களை தவிர்க்கமுடியுமென்று சவுதி நாட்டின் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் கிஸ்புல் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

அண்மையில் தொழில் அமைச்சர் அலவி மௌலானாவை சந்தித்து உரையாற்றும் போதே சவுதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(உ-4)

## குடா நாட்டிற்கு எடுத்து வரும் தபால்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கல்வயல்)

யாழ். குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் தபால் பொதிகளில் பொருட் பொதிகள் கூடுதலான இடத்தை வகிப்பதாக கூறப்படுகிறது.

இதனால் எடுத்துவரப்படும் தபால்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்படுகிறது.

பொருட் பொதிகளை அனுப்பி வைப்பதில் காணப்பட்ட இறுக்கமான நடைமுறைகள் சில தளர்த்தப்பட்டிருப்பதையடுத்தே இந்நிலை எழுந்துள்ளது. (உ-111)

## கச்சேரிப் பகுதி கடைகளில் திருட்டு

(சுண்டுக்குளி)

கடந்த ஞாயிறன்று இரவு கச்சேரியடிப் பகுதியில் அடுத்தடுத்து அமைந்திருந்ததையல் கடை மற்றும் அழகு சாதன விற்பனை நிலையம் என்பவற்றுள் புகுந்த திருடர், பெறுமதி மிக்க பல்வேறு பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இக்கடைகளுக்கு முன்பாக இராணுவ காவலரண் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இத் திருட்டுகள் தொடர்பாக வர்த்தகர்களால் சம்பந்தப்பட்ட பகுதி படைத்தரப்பினர்க்கு அறியப்படுத்தப்பட்டிருப்பதாய் தெரிய வந்துள்ளது. (உ-110)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல- 05

### ஆக்கம்: செல்வி

★ பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச்சொல்லை எழுதுக.

01) மங்கலம்————
02) மரியாதை ————
03) புகழ்ச்சி————
04) புராதனம்——— —
05) பெருமை————

★ பின்வரும்சொற்களுக்குரியபெண்பாற்சொல்லைஎழுதுக.

06) களிறு ————
07) நாயகன்————
08) சேவல்————
09) கிடாய் ————
10) கலை——— ——

★ பின்வரும் சொல் வரிசையில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கீறுடுக.

11) அன்பு, விருப்பம், பாசம், கோபம்
12) அன்னை, மாணவன், தந்தை, குரு
13 கிளி, மைனா, புறா, காகம்
14) பசு, நாய், சிங்கம், பூனை
15) உருளைக்கிழங்கு, கரட், வெங்காயம், கத்தரி

★ பின்வரும் சொற்களைவைத்து இடைவெளியைநிரப்புக.

செல்லமமாள, எட்டயபுரம, சுப்பிரமணிய பாரதியார், விடுதலை, பத்திரிகை

16) பாப்பா பாட்டுக்களைப் பாடியவர்————
17) இவர் ———— இல் பிறந்தவர்
18) இவருடைய மனைவியின் பெயர்————
19) இவர் ———— உணர்வுடைய பாடல்களையும் பாடினார்
20) இவர் ஒரு ———— ஆசிரியர் ஆகவும் கடமைபுரிந்தார்.

★ பின்வரும் ஆங்கிலச்சொற்களின்தமிழ்ப்பதத்தைஎழுதுக.

21) OWLET————
22) LAKE ————
23) DEER————
24) LION ————
25) COCK————

★ பின்வரும் அட்டவணையை அவதானித்து கீழேதரப் பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக.

| பதிவேட்டில் | A | B | C | D | E | F | முழுத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் தொகை | 45 | 44 | 45 | 43 | □ | 44 | 264 |
| இன்றைய வரவு | 40 | 44 | 42 | □ | 44 | 40 | 250 |

26) பதிவேட்டிலுள்ள மொத்தத்தொகைக்கேற்ப E பிரிவில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?
27) அன்று D பிரிவில் எத்தனை மாணவர்கள் வந்துள்ளனர்?
28) அன்று வராத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
29) அன்றுவந்த மாணவர்களுக்கு ஒருவருக்கு 4 இனிப்புகள் வீதம் கொடுக்கத் தேவையான இனிப்புகள் எத்தனை?
30) ஒருவருக்கு 2000 மி லீற்றர் வீதம் வந்த மாணவர்களுக்குக் கொடுக்க எத்தனை லீற்றர் குளிர்பானம் தேவை?

குறிப்பு:-

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 26-02-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்

**கல்விப்பகுதி**
**வினா இல: 05**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..........
சொந்த முகவரி: ..........
கற்கும் பாடசாலை : ..........
மாணவர் கையொப்பம் : ..........

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

புலமைப் பரீட்சை

## வினா இல-04 விடைகள்

01) அழகு
02) காடு
03) பூமி
04) மலை
05) உடுக்கு
06) இடையன்
07) குயவன்
08) ஆண்டான்
09) அகமுடையான்
10) குணவான்
11) ஔவையார்
12) துரோணர்
13) அபிமன்யு
14) சூர்ப்பனகை
15) குகன்
16) இளங்கோவடிகள்
17) தம்பி
18) அடிகள்
19) கம்பர்
20) கவிச்சக்கரவர்த்தி
21) சூரியகாந்திப்பூ
22) தாமரைப்பூ
23) மல்லிகைப்பூ
24) ரோஜாப்பூ
25) லில்லிப்பூ
26) நெல்லிரசம்
27) அன்னாசி
28) நெல்லிரசம், அன்னாசி மாம்பழம், தோடம் பழம், விளாம்பழம்
29) மாம்பழம்
30) 125 மி. லீற்றர்

## புலமைப் பரிசில் வினா இல-4

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

★ நிலஜா, யாழ் இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.
★ அ. கடோற்கஜன், யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை.
★ ம கஸ்தூரி, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
★ சி பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
★ சி.கோமளதரன் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை.
★ சி தீபிகா, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
★ இ சர்மிலா, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
★ பு.ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாசாலை.
★ ர.அனுஷன், சாவ. இந்து ஆரம்பப்பாடசாலை.
★ ச.பிரவீணா, காந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம்.
★ த.அனுஷா, கொககுவில் இந்து ஆரம்பப்பாடசாலை
★ ச.கஜலக்ஷனா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
★ வி.மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
★ சி.லகீசன், மானிப்பாய் சென்ற்ஆன்ஸ்.
★ க.சரவணபவன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
★ வ ஜனனி, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
★ த நந்தகோபி, யாழ். புனித ஜோன் பொஸ்கோ.
★ சி.ராகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
★ ப.தாமரா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
★ க நிரோஜினி, புனிதமரியாள் வித்தியாலயம்.
★ ச.தீபிகா, புலோலி புற்றளை மகாவித்தியாலயம்,
★ லாவண்யா, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை.
★ ச.தவரூபா, யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்.
★ சு.சுபந்தா, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
★ ப.சிந்துஷா, நயினா தீவு நாகபூஷணிவித்தியாலயம்.
★ ச.சுதாகரன், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
★ வி.ஜெயதீபா, நயினா தீவு நாகபூசணி வித்தியாலயம்.
★ க.மிதுஷனன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
★ பா.கௌசிகா, தாவடி இ.த.க பாடசாலை.
★ ஆ.யோகினி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.
★ ப.துஷ்யந்தன், அல்லாரை அ.த வித்தியாலயம்.
★ சி கஜந்தினி, சாவ. இந்து ஆரம்பப்பாடசாலை.
★ மோ. அகில்ராஜ், திருநெல்வேலி றோ.க.த. பாடசாலை.
★ கி.துஷ்யந்தி, அரியாலை அ.த.க பாடசாலை.

# வாசிப்பு பழக்கம்அவசியம்

கடந்த பத்துவருட பெறுபேறுகளை ஆய்வு செய்த சில அதிபர்களைக் கேட்டால் அதிர்ச்சியான பல தகவல்களைச் சொல்வார்கள். இதில் மிகவும் முக்கியமானது என்னவென்றால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைவிட சித்தியடையாத மாணவர்கள்பலர் ஓ எல், ஏ.எல் பரீட்சைகளில் மிகச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுள்ளனர். இதைவிட எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாதவர்கள் பலர் இருக்கின்றனர். இதற்குக் காரணம் பெற்றோர்கள்தான்.

> **'தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பின்னடைவிற்கு பெற்றோர்களே காரணம்'**

கே.வி. குணசேகரம்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தமட்டில் தரம் ஒன்றில் இருந்து ஐந்து வரையான பாடப்புத்தகங்களை நன்கு கற்றல் அவசியமானதாகும். பாடப்பரப்பு சார்ந்த வினாக்கள் தான் முழுமையாக பரீட்சைக்கு வரும். பொதுவாக மொழி அறிவு மிக்க பிள்ளையால் தான் பரீட்சையில் சித்தியடைய முடியும். இதற்காக பிள்ளைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தைஏற்படுத்த வேண்டும். தரம் ஒன்றில் இருந்தே சிறுவர் கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். விரைவாக வாசித்துக் கிரகிக்கும் பிள்ளைகளுக்கு இப் பரீட்சை மிகவும் இலகுவானதாக இருக்கும். அத்துடன் பிள்ளைக்கு சகல விதமான அறிவும் இருத்தல் வேண்டும். இது ஒரு போட்டிப் பரீட்சையே தவிர பிள்ளையின் கல்வியறிவை அளவிடும் பரீட்சையல்ல என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். எனவே பிள்ளைகள் சகல வற்றையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பை உண்டு பண்ணுதல் வேண்டும். மொழி, சுற்றாடல், ஆங்கிலம், கணிதம், ஆரம்பவிஞ்ஞானம், அழகியல், ஆக்கம் போன்ற பாடங்களில் இருந்து வினாக்கள் தெரிவு செய்யப் படுவதால் மேற்கூறப்பட்ட எல்லாப் பாடங்களுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். சில பெற்றோர். ஒவ்வொரு பாடங்களுக்கும் ஒவ்வொரு ஆசிரியரிடம் அனுப்புகிறார்கள்.

# போக்குவரத்து செய்வதில் பொதுமக்கள் சிரமம்

(கல்வயல்)

பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டை, கற்கோவளம் பகுதிமக்கள் போக்கு வரத்துச் செய்வதில் பெரும் இடைஞ்சல்களை அனுபவித்து வருகின்றனர்.

பருத்தித்துறையில் இருந்து நாகர் கோவில் செல்லும் பேருந்து சேவை முன்பு மேற்படி பகுதிகளூடாகவே நடத்தப்பட்டு வந்த போதிலும், தற்போது அந்நடைமுறை அமுலில் இல்லை.

அத்துடன் இடம்பெற்று வந்த தனியார் சிற்றூர்திச் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது

இதன் காரணமாக இப் பகுதி மக்கள் போக்குவரத்திற்காய் துவிச்சக்கர வண்டியையே நாட வேண்டியிருப்பதுடன், சிலர் நடந்து சென்றே தமது கருமங்களை ஆற்றி வருவதனையும் அவதானிக்க முடிகிறது (உ-111)

# பொலிஸாரின் சைக்கிளை திருடிய பலே ஆசாமி

(மந்துவில்)

பொலிஸாரின் துவிச்சக்கர வண்டியை திருடி விற்பனை செய்த பலே ஆசாமி வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் அண்மையில் நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

நெல்லியடிப் பகுதி உணவுக் கடை அருகே பொலிஸார் நிறுத்தி வைத்திருந்த [illegible] பட்டிருந்த துவிச்சக்கரவண்டி காணாமல் போனது;

இதனையடுத்து, உணவுக் கடை உரிமையாளரின் ஒத்துழைப்புடன் சந்தேகத்திற்கிடமான ஒருவரை விசாரித்த போது,

துவிச்சக்கர வண்டியினை களவெடுத்து மது அருந்துவதற்காக மிகவும் குறைந்த விலைக்கு விற்றதனை ஒப்புக் கொண்டார்; (உ-39)

# பன்னிரு திருமுறைப்பாடல் தொகுப்பு வெளியீடுஇன்று

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால், மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கூட்டு வழிபாட்டுக்குரிய பன்னிரு திருமுறைப் பாடல்களைத் தொகுத்து வலம்புரி வெளியீடாக இன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளது;

வலம்புரி நாளிதழ் இயக்குநர் சிவஞானம் வெற்றிவேலாயுதம் தலைமையில் யாழ்ப்பாணம், கச்சேரி, நல்லூர் வீதி, ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தானத்தில் முன் இரவு 7 மணியளவில் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் இவ் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சத்திரத்து ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் த. குகநேசன் தலைமையில் நூல் அறிமுக விழா நடைபெற்று இரவு முழுவதும் ஆலயங்களுக்கு சென்று அடியவர்களுக்கு இந்நூலை அன்பளிப்பு செய்யும்பணியும் இடம் பெறும். (உ)

## இன்று ஒரு தகவல்

# கற்பின் உறுதி உயர்வு தரும்

உபகீசகர்களைவதம் செய்த பின்பு, பீமன் பின் வருங் கதையைத் திரௌபதிக்குச் சொன்னான் திரௌபதி! கேள்: முன்பொரு காலத்தில் தேவராதன் என்பவனுக்கு அன்புள்ள மனைவி இருந்தாள். அவள் பெயர் சிரோமணி கற்புநெறி பிறழாதவள். சிரோமணியின அழகைப் பற்றிக் கேள்வியுற்ற அரக்கன் ஒருவன் ஒரு சமயம் அவளை, அவளது கணவன் போல் வடிவம் எடுத்துக் கொண்டு வந்து அபசரித்துப் போய் விட்டான். அவ்வாறு அபகரித்துப் போன அந்த அரக்கன் சிரோமணியை ஒரு குளக் கரையில் இறக்கி வைத்து விட்டுத் தன் சுய வடிவத்தை எடுத்துக் கொண்டு பல வழிகளிலும் அவளைப் பலவந் தப்படுத்தினான்.

கற்புக்கரசியான சிரோமணி அரக்கனுக்கு இணங்காமல் தன் கற்பைக் காக்கத் தனது சக்தி அனைத்தையும் திரட்டிப் போராடிக் கொண்டிருந்தாள். அதனால் கோபங் கொண்ட அரக்கன் கத்தியை எடுத்துக் கொண்டு சிரோமணியைப் பயமுறுத்தினான். அரக்கனின் மிரட்டலுக்குச் சிரோமணி அஞ்சவில்லை. சிரோமணிக்கு உதவத் துடிப்பது போல் குளத்தில் மீன்கள் துள்ளிக் கொண்டிருந்தன. வானமும் குமுறிக் கொண்டிருந்தது. மனித நடமாட்டம் இல்லாத அந்த இடத்தில் கற்புக்கரசி சிரோமணி தன்னந்தனியாக அரக்கனோடு போராடிக் கொண்டிருந்தாள் அபலை சிரோமணியின் உடல் சோர்ந்து விடத் தொடங்கியது.

தருமத்திற்குச் சோதனை ஏற்படும்காலத்தில் குமுறுகிற நல்லோர் நெஞ்சம் போல் குமுறிக் கொண்டிருந்த வானத்தை அவள் நிமிர்ந்து பார்த்தாள். பார்க்கும் இடந்தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் வானமே அவளுக்குப் பரமனின்வடிவமாகத் தோன்றியது. வானத்தை நோக்கி இரு கரங்களையும் குவித்துக் கண்களில் நீர் மல்கச் சிரோமணி அரற்றினாள். ''நான் உண்மையில் பதிவிரதையாயின், எனது நடத்தையால் சான்றோர் மகிழ்ச்சி அடைந்திருப்பார்களாயின், எனது உடலில் தலைநீங்கலாக மற்றப்பகுதி முழுவதும் கல்லாக மாறட்டும்'' என்று சொன்னாள்.

சிரோமணி இவ்வாறு சபதம் எடுத்துக் கொண்டதும் அவளது உடலில் தலை நீங்கலான இதர அவயவம் அனைத்தும் கல்லாக மாறி விட்டது. தனது விருப்பம் நிறைவேறாததைக் கண்ட அரக்கன் சிரோமணியின் தலையை வாளினால் துண்டித்து விட்டான். இதன் விளைவாக; பூலோக வாழ்வு முடிந்த சிரோமணி வானவர் மலர் தூவத் தேவலோகம் சென்றாள். ஜகன் மாதாவான பார்வதி தேவிக்கு நகமும், சதையும் போல் நெருங்கிய தோழியாகும் பேறு பெற்றாள்.

''பெண்ணே! கற்புள்ள மாதருக்குத் துக்கம் குறைவு. முடிவில் சுகம் அதிகம் என்பதைத் தெரிந்துகொள்'' என்று சமாதானம் சொல்லி திரௌபதையை நகருக்கு அனுப்பி வைத்தான் பீமன்.

நன்றி

**மகாபாரதம், விராடபருவம்**
**தெய்வீகக் கதைகள்**

---

## மாசிமக
### இலட்சார்ச்சனை

(மந்துவில்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை பெப்ரவரி 26 ஆம் திகதி திங்கட்கிழமை முதல்மார்ச் 7 ஆம் திகதி புதன்கிழமை வரையுள்ள பத்து தினங்களுக்கு நடைபெறும். மார்ச் 8 ஆம் திகதி வியாழக்கிழமை விசேட அபிடேகமும் நடைபெறவுள்ளது. (உ-39)

## தீர்த்தவாரி

(நல்லூர்)

புங்குடுதீவு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் தீர்த்தத் திருவிழாவின்போது, புங்குடுதீவு பழைய துறைக் கடற்கரையில் 'தீர்த்தவாரி' நிகழ்வு இடம்பெற்றது. (உ-103)

## பேருந்து நிலையத்தில் சைக்கிள்

(கல்வயல்)

அச்சுவேலி பேருந்து நிலையப் பகுதியில் ஒழுங்கற்ற முறையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதால், பேருந்து தரித்துச் செல்வதிலும், பொதுமக்கள் நடமாட்டத்திற்கும் மிகுந்த சிரமம் எதிர்நோக்கப்படுகிறது. (உ-111)

## இலவச பாலர் பாடசாலை

(நல்லூர்)

எதிர்காலச் சந்ததியினரின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக்கழகம் இலவச பாலர்பாடசாலை யொன்றினை நடத்திவருவதாக, அதன் செயலாளர், வ. சந்திரசேகரம் தெரிவித்துள்ளார். (உ-103)

## வீதி திருத்தம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட, கொக்குவில் மேற்கு-ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி வீதி சிறந்த முறையில் செப்பனிடப்பட்டுள்ளது.

கொக்குவில் மேற்கு வராகியம்மன் வீதியும் செப்பனிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-103)

### நிர்வாகிகள்
## தெரிவு

[யாழ்ப்பாணம்]

முத்தமிழ் சனசமூக நிலையத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக அன்ரனி கிலோட், உப தலைவராக சி.புஸ்பராசா, செயலாளராக ப. சந்திரன், உபசெயலாளராக செல்வி ஜசோ பொருளாளராக வி. அன்புச் செல்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ)

## மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி கல்லூரி அதிபர் திருமதி ச.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. [உ-15]

## விபரம் திரட்டல்

(கல்வியங்காடு)

யாழ் குடாநாட்டில் உள்ள பெயர்ப் பலகை அற்ற கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் பெயர்ப் பலகை சேதமடைந்த கிராம அலுவலர் பிரிவு ஆகியவற்றின்விபரங்கள் யாழ் செயலகம் மூலம் திரட்டப்பட்டு வருகிறது. [உ-54)

---

# தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்வதால் சமாதானம் ஏற்படாது
## கலாநிதிவிக்கிரமபாகுகருத்து

(கொழும்பு)

பிரிட்டன் தமிழீழவிடுதலைப் புலிகளை அடக்குவதன் மூலம் இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்தலாமென்று அறிவில்லாதவர்களா லேயே நினைக்கமுடியும்.

புதியஇடதுசாரி முன்னணியின் தலைவர்கள் குழுசார்பாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் பிரித்தானியாவின்ஏகாதிபத்திய அடக்குமுறைச் சட்டத்தை பயன்படுத்தி இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கலாமென சிந்திக்கும் அரசாங்கத்தையும் வெற்றி பிடித்த இனவாதக் கும்பலையும் வன்மையாகக் கண்டிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உழைக்கும் மக்களையும் முற்போக்கு அமைப்புக்களையும் அடக்கவேபிரிட்டனில்இம்மசோதா கொண்டுவரப்பட்டதாக இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன. (இ

# சிரமதான பணிகள் மூலம் பாடசாலைகள் துப்புரவு

(ஊர்காவற்றுறை)

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள், சிரமதான நிகழ்வுகள் மூலம், பாடசாலை வளாகம் மற்றும் சுற்றயல் பகுதிகளைத் துப்புரவு செய்து வருகின்றனர்

இச்சிரமதானப் பணியில் மாணவர்களுடன் மாணவர்களின் பெற்றோர்களும் ஈடுபட்டுள்ளனர்

இச் செயற்பாடுகள் மாணவர்கள் மத்தியில் சேவை மனப்பாங்கினை உருவாக்கி வளர்க்க உதவும் என கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

# நல்லூர் பிரதேச சபையில் கலாசார சபை அமைப்பு

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியில் ''கலாசாரசபை'' ஒன்றினை விரைவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென சம்பந்தப்பட்ட பகுதிக் கலைஞர்களின் பெயர் விபரங்களைத் திரட்டும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வளரும் கலைஞர்களை ஊக்குவிப்பதும் நமது கலை பண்பாடுகளைப் பேணிப் பாதுகாப்பதுமே இக் கலாசார சபை அமைக்கப்படுவதன் முக்கிய நோக்கமென பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-54)

# பார்வையாளர் பாதுகாப்பு ஊழியருடன் கலாட்டா
### யாழ் போதனா வைத்தியசாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மது போதையில் வைத்தியசாலை விடுதிக்குள் நுழைந்த நபர், சட்டதிட்டங்களுக்கு முரணான வகையில் நடந்துகொண்டமையை தட்டிக்கேட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

உறவினா ஒருவரைப் பார்ப்பதற்கென வைத்தியசாலை விடுதிக்குள் நுழைந்த மது போதையில் காணப்பட்ட ஒருவர் பார்வை நேரம் முடிந்த பின்பும் அங்கு தங்கி நின்றார்.

இது குறித்து பாதுகாப்பு உத்தியோகத்தர் சுட்டிக்காட்டியபோது அவரை தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் தாக்கியதாகவும்,

பதிலுக்கு தன்னைக் காப்பாற்றும வகையில் பாதுகாப்பு உத்தியோகத்தரும எதிர்த்து தாக்கியதாகவும,

உடனடியாக அவ்விடம் விரைந்த சக பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரியவந்துள்ளது

இதேநேரம், அவ்விடம் சென்ற பொலிஸார் மது போதையில் நின்றவர் மீது உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது (உ-104)

# கியூடெக் நிறுவனத்தால் மகளிர் தின நிகழ்வு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவனத்தினால் சகோதரப் பகிர்வாழ்வு மகளிர், விவசாய சங்க மகளிர், விழிப்புணர்வு குழு மகளிர் அமைப்புக்களை ஒருங்கிணைத்து 300 மகளிர் பங்குபற்றிய. மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் மருதனார்மடம் ஆச்சிரமத்தில்சிறப்பாக நடைபெற்றன.

பருத்தித்துறை, கரவெட்டி, பொலிகண்டி, சக்கோட்டை, இன்பருட்டி, இராஜகிராமம் செல்வ புரம், இளவாலை, சில்லாலை, பண்டத்தரிப்பு, அளவெட்டி, மல்லாகம், சாவற்காடு, நாவாந்துறை, அல்லைப்பிட்டி, ஊரதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிகளிலிருந்து மகளிர் குழுக்கள இந்நிகழ்வில் வந்து கலந்து கொணடனர்.

இந் நிகழ்வில் மகளிர் சமூக நிலையை எடுத்துக்காட்டவும், அவர்களின் பங்கை எதிர்கால நடவடிக்கைகளுக்கு தயார்ப்படுத்தும் விதத்திலும் அமைந்த நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. (உ-59)

## மாலைநேர வகுப்பு

(நல்லூர்)

கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி கல்விவளர்ச்சிக் கழகத்தினால், முதலாம் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரையிலான மாணவர்களுக்கு மாலை நேரவகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. [உ-103]

---

### அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள்
# நாட்டைவிட்டு வெளியேற வேண்டாமெனப் பணிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிரும் மார்ச் 12 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 8 ஆம் திகதிவரையும் எந்தவிதமான வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொள்ளக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்காலப்பகுதிக்குள் ஆளுங்கட்சியின் இரண்டாவது பதவிக்காலத்தில் முதலாவது வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெறவுள்ளதனாலேயே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்காலப் பகுதிக்குள், அவசர தேவைகள் நிமித்தம் வெளிநாடுகளுக்குச்செல்ல வேண்டிய ஆளுங்கட்சி எம். பிக்கள் விசேட அனுமதியைப் பெறவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ)

### ★பத்திரிகையாளர் திருச்செல்வம்
# அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுத்தாக்கல்?

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டதின்கீழ் கைதுசெய்யப்பட்டிருக்கும் யாழ்ப்பாண பத்திரிகையாளர் ஏ.என். திருச்செல்வம் தன்னைவிடுதலைசெய்யுமாறு கோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைமீறல்மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த அடிப்படை உரிமை மீறல்மனுவைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மேற்கொண்டுள்ளார்.

பத்திரிகையாளர் திருச்செல்வம் கடந்தஜனவரி மாதம் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்தானம் செய்யும் பெண்கள் இயக்கம்

(கொழும்பு)

மரணத்தின் பின்னர் கண்களைத் தானம் செய்யும் பெண்கள் இயக்கம் ஒன்றை ஜனாதிபதி ஆரம்பிக்கவுள்ளார்.

ஐ. தே. கட்சியின் பாதயாத்திரையின் போது ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இழிவான செய்கையை அடுத்தே ஜனாதிபதி இம்முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ)

# ஷான் தீவிரவாதிகளுக்கு உதவிகள் நிறுத்தம்?

[பாங்கொக்]

மியான்மாரில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டுவரும் ஷான் தீவிரவாதிகளுக்கு தாய்லாந்து வழங்கிவரும் உதவிகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென மியான்மார் அரசாங்கம் தாய்லாந்தைக் கோரியுள்ளது.

கடந்தவார இறுதியில் இரு நாட்டு இராணுவத்தினரிடையேயும் எல்லைப்புறத்தில் ஏற்பட்ட மோதலின்போது மியான்மார் இராணுவம் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் தாய்லாந்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றொருவர் காயமடைந்ததாகவும் தாய்லாந்து சுமத்திய குற்றச்சாட்டை மறுத்து மியான்மார் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-9)

# அமெரிக்க அமைச்சர் மத்தியகிழக்கு விஜயம்

[பக்தாத்]

அமெரிக்க வெளி விவகார அமைச்சர்கொலிஸ் பவல் மிக விரைவில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்

இவ் விஜயத்தின் போது ஈராக்கிற்கு எதிரானதும் பலஸ்தீனத்திற்கு எதிரானதுமான அமெரிக்கக் கொள்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துமாறு அரேபியர்களை ஈராக் கேட்டுள்ளது.

ஜோர்ச் புஷ் அமெரிக்க ஜனாதிபதியானதன் பின்னர் அமெரிக்க வெளி விவகார அமைச்சர் ஒருவர் மத்திய கிழக்கிற்கு மேற்கொளளும் முதல் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# பிலிப்பைன்ஸில்மண்சரிவு 16 பேர் பலியாகினர்

(மணிலா)

பிலிப்பைன்ஸ்நாட்டில்கடந்த வாரம் பெய்த அடைமழையால் ஏற்பட்ட மண்சரிவில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

பெருமழையினால் 25 நகரங்களின் ஒரு இலட்சம் மக்கள் வீடிழந்துளளனர்.

சுமார் இரண்டாயிரம் பேர் அரசின் புகலிடப்பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். (உ-7)

# தென் கொரியத் தலைவர் அமெரிக்கா பயணம்

(சியோல்)

அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் அமெரிக்க தென்கொரிய உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தென்கொரியத் தலைவர் கிம் டேஜுங் வரும மார்ச் மாதம் 7ஆம் திகதி வாஷிங்டன் பயணமாகவுள்ளார்

இவ்வுச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் உடன் இரு நாட்டு உறவு, வடகொரியா மற்றும் வடகிழக்காசிய நாடுகள் குறித்து அமெரிக்க தென்கொரியாவின் கருத்தொருமித்தகொள்கைகள் தொடர்பாக கிம்டேஜுங் விரிவாக கலந்தாலோசிப்பார் என்று தென்கொரிய நீல அலுவலகம் தெரிவித்துள்ளது (உ-)

# பூமி வெப்பமடைவதால் மோசமான பாதிப்புக்கள் அடுத்தஆண்டுஏற்படலாம்

(புதுடில்லி,

பூமி மிக வெப்பமடைவதால் உலகின் பல்வேறு இடங்களில் அடுத்த ஆண்டு பெரும் மோசமான பாதிப்பு ஏற்படலாம் என ஐ நா மன்றத்தின் ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

திங்களன்று ஜெனீவாவில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வறிக்கையில் தெற்காசியப் பிராந்தியத்தில் பூமி வெப்பமடைவதால் ஏற்படும் தாக்கங்கள் பற்றி விரிவாக்கம் கூறப்பட்டுள்ளது.

ஆசியாக் கண்டப் பகுதியில் சூறாவளி, வரட்சி வெள்ளப் பெருக்கு மற்றும் நீர்த் தட்டுப்பாடு, கடல் மட்டம் உயருதல் போன்ற விளைவுகள் ஏற்படுவதுடன்,

இந்திய துணைக் கண்டத்தின் 50 கோடி மக்களுக்கு நீர்வழங்கி வரும் இமயமலைப் பனிப்படலங்கள் ஊறி வருவதால் முதலில் பெரும் வெள்ளப் பெருக்கும் பின்னய காலங்களில் வரட்சியும் நிலவும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-07]

# மத்திய கிழக்கில் சமாதானம் மலர பாப்பரசர் பிரார்த்தனை

[றோம்]

மத்திய கிழக்கில் தொடரும் வன்முறைகள் நீங்கி பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே சமாதானம் மலர வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் விசேட பிரார்த்தனைகளில் ஈடுபட்டதாக வத்திக்கான்அறிவித்துள்ளது.

வத்திக்கானிலுள்ள புனித பேதுறுவானவர் பேராலயத்தில் இந்தப்பிரார்த்தனையை பரிசுத்த பாப்பரசர் நடத்திய போது பெருந்திரளான பக்தர்கள் திரண்டிருந்தனர்.

அவர்கள் மத்தியில் பேசிய பாப்பரசர் மத்திய கிழக்கில் வன்முறைகள் அதிகரித்துச் செல்வது மிகுந்த கவலையை தருகிறது. இதன் காரணமாக உயிர்கள் பலியாவதுடன் சமாதானமும் வெகு தூரம் விலகிக் கொண்டே போகிறது எனத்தெரிவித்துள்ளார்.

இந்த வன்முறைகள் நீங்கவும் புரிந்துணர்வுடன் கூடிய நம்பிக்கை ஏற்பட்டு சமாதானம் மலர்வதற்கும் சகலரும் பிரார்த்திக்க வேண்டும் என்றும் பரிசுத்த பாப்பரசர் கேட்டுக் கொண்டார். (உ-08)

## உலக தரிசனம்

# பாக்விமானம் மீது தாக்குதல்

(புதுடில்லி)

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் வான் பகுதிகளில் அத்துமீறிப்பறந்த பாகிஸ்தானின் வேவு விமானங்கள் இரண்டின் மீது தமது தரப்பினர் தாக்குதல் நடத்தியதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

காஷ்மீரின் ஜம் பகுதியில் திங்கள் மதியம் இச்சம்பவம் நடைபெற்றதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-7)

# தொடரும் பூகம்பம்

(புதுடில்லி)

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தில் மீண்டும் ஒரு பூகம்பம நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பூகம்பத்தால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை (உ-9)

# ஒளிநாடா வெளியீடு

(வாஷிங்டன்)

அண்மையில விபத்துக்குள்ளான ஜப்பான் நாட்டு மீன்பிடிப் படகின் சிதைவுகளை ரோபோமூலம் படம்பிடித்து, அவ் ஒளிநாடா அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ளது. (உ-9)

# எதிர்ப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் வலது சாரித் தலைவர் ஏரியல் ஷெரோனுடன் இணைந்து கூட்டு அரசாங்கமொன்றை அமைப்பதற்கு பிரதமர் எகுட் பராக் எடுத்து வரும் முயற்சிகளுக்கு அவரது தொழிற் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. (உ-08)

## செய்திப்பரல்

- பிரிட்டனின் புகழ் பெற்ற ஸ்பைஸ் இசைக் குழு யுவதி எம்மாபுனடொன் இரகசிய முறையில் ஜேடி ஜோன்ஸை திருமணம் செய்து கொண்டார்.
- ஈக்குவடோரில் ஆயுதக் குழுவொன்றால் தடுத்து வைக்கப்பட்ட எண்ணெய் நிறுவன தொழிலாளர்களை விடுவிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.
- இந்தோனேஷியாஜனாதிபதி அப்துல் ரஹமான் வாஹிட்டிற்குஎதிராக சுமார் இரண்டாயிரம் உயர்பள்ளி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டுள்ளார்கள்.
- எல்சல்வடோர் பூமியதிர்வில் பலியானோர் தொகை 300 ஆக அதிகரித்துள்ளது. (உ-9)

# வீரப்பன் பற்றிய தகவல்களை வழங்கி வந்த ஆதிவாசியை காணவில்லை

(சென்னை)

வீரப்பன் பற்றிய தகவல்களை பொலிஸாருக்கு வழங்கி வந்த ஆதிவாசி ஐயப்பன் என்பவர் காணாமற் போயுள்ளார்.

பலத்த பாதுகாப்பின் மத்தியில்மேற்படி நபர் காணாமற் போனமை பொலிஸ் வட்டாரங்களில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வீரப்பனின் ஆட்களே இவரைக் கடத்திச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ-9)

# டெனிஸ் வீராங்கனை உருவத்தில்கணனி வைரஸ்

(வாஷிங்டன்)

பிரபல டெனிஸ் வீராங்கனை அன்னகொர்னிகோவின் உருவப்படத்தை பிரதிபண்ணி உருவாக்கப்பட்ட கணனி வைரஸ் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் இந்த வைரசினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வைரஸ் கணனிகளை முற்றாகச் சேதப்படுத்தாது. எனினும் இன்ரநெற் ஈமெயில் வலையமைப்பை சேதப்படுத்துமென நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஏற்கனவே பல நிறுவனங்கள் இந்தவைரசினால் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன;

கணனிகளுக்கு முன்னால் உள்ள இளைஞர்களை கவரும் விதத்தில் இந்த வைரஸ் வடிவமைக்கப்பட்டு பரப்பப்பட்டதாக தெரியவருகிறது.

கடந்த ஆண்டு மே மாதத்திலும் இதுபோன்ற 'ஐலவ்யு' கணனி வைரசினால் பல லட்சம் டொலர் பெறுமதியான கணனிகள் பாதிப்பிற்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# சமூகத்தைச் சீர்குலைக்கும் ஆடைகள் அணியும் பெண்களுக்கு எச்சரிக்கை

[சென்னை]

பொது இடங்களிலே சமூகச் சீர்கேட்டை விளைவிக்கும் வகையில் ஆடைகள் அணியும் பெண்களுக்கு எம்மால் ஆபத்து ஏற்படலாம் என சிவசேனக் கட்சியின் மாநிலத் தலைவர் ஜி நாராயணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பண்பாட்டுக்கு முரணான வகையில் ஜோடி சேர்ந்து உலாவும் காதலர்களையும் சிவசேனாக்கட்சி வன்மையாக கண்டித்துள்ளது. [உ-9]

# சிறைக்கைதிகள் மீட்பு

[பிறேசிலியா]

பிறேசில் நாட்டில் சான் பாங்லோ மநிலத்திலுள்ள சிறைச்சாலைகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரங்கள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சம்பவங்களில் 15 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டதுடன் ஏழாயிரம் சிறைக்கைதிகள் பணயம் வைக்கப்பட்டமை தெரிந்ததே

இவர்கள் அனைவரும் மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-8)

# இந்திரஜித்குப்தா காலமானார்

(புதுடில்லி)

இந்தியாவின் கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான இந்திரஜித்குப்தா நேற்று அதிகாலை கல்கத்தாவில் காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவருக்கு முன்னதாக புதுடில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகத்தில் சிகிச்சை அழிக்கப்பட்டது.

பின்னர் கல்கத்தாவில் சிகிச்சை பெற்ற இவர் தனது 81 வது வயதில் காலமானார். (உ-7)

# மின் கோபுரம் தகர்ப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் ராய்தல் எனும் இடத்திற்கு அருகே மின்சார கோபுரம் ஒன்றை தீவிரவாதிகள் குண்டுவைத்து தகர்த்ததை அடுத்து காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் இருளில் மூழ்கி உள்ளது. (உ-7)

# விரைவில் தேர்தல்

(டாக்கா)

பங்களாதேஷில் விரைவில் தேர்தல் நடத்த தான்முயற்சி எடுத்துள்ளதாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக்ஹசீனா அறிவித்துள்ளார்.

பிரதமரை பதவிவிலகக் கோரியும் விரைவில் தேர்தலை நடத்துமாறும் எதிர்க் கட்சியினர் கடுமையான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதை அடுத்தே பிரதமர் இம் முடிவினை அறிவித்துள்ளார். [உ-9]

# அவுஸ்திரேலியாவில் நான்கு நாள் மாநாடு

தெற்காசிய நாடுகளுக்கான விவகாரங்கள் தொடர்பாக எதிர்வரும் வியாழக்கிழமை மகாநாடொன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி உபதலைவர் கரு.ஜெயசூரியா, தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர் இம்மாநாடுநான்கு நாட்கள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தன் மாட்டு

குறள்

வலம்புரி

## நட(ன)மாடும் இராத்திரி

இந்துக்கள் அனைவராலும் புனிதமாக அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் சிவராத்திரிவிரதம் முதன்மையானது. சிவனின் திருவருளை வேண்டி வழிபடும் இவ்விரதம், சிவவிரதம் என்பதால் மட்டும் பெருமையடையவில்லை மாறாக யாழ். குடாநாட்டுத் தமிழர்சள் தம் வாழ்வில் வருடத்தில் ஒரு முறையாவது இரவு முழுவதும் நடமாடுவதற்கு அனுமதி கிடைக்குமென நம்பும் இரவாக இருப்பதாலும் சிவராத்திரி விரதம் பெருமையடைகிறது

இரவு எட்டுமணி என்றவுடன் வீடுகளுக்குள் முடங்கும் அவலநிலை கடந்த ஐந்து வருடங்களாக யாழ். குடாநாட்டில் நீடித்து வருகிறது நேரம் பாராது-ஓய்வின்றி உழைக்கும் தமிழரின் நேரத்தில்அரைப்பகுதியை ஊரடங்குசசட்டம் விழுங்கிவிட்டது. இரவு எட்டு பணிக்குப் பின் வீதியைக் கூட எட்டிப்பார்க்க முடியாத சூழ்நிலை தொடருகின்ற இவ்வேளையில், பூலோக இயக்கத்திற்காக நடனமாடும் சிவனுக்கு அனுஷ்டிக்கும் சிவராத்திரியில் தமிழர் நடமாடக் கூடியதாக இருந்தால் அதனை நட(ன)மாடும் இராத்திரி என்றும் அழைக்கலாம்.

எனினும் வருடத்தில் ஒருமுறையாவது குடாநாட்டுத் தமிழர்களை இரவில் நடமாட அரசு அனுமதிக்கிறது என்பதை சிஹல உறுமயவும், ஜே.வி. பியும் அறியாது இருக்க அந்தச் சிவனே உதவ வேண்டும். இல்லாவிடில் தமிழர்க்கு அரசும் படையினரும் உரிமை வழங்கிவிட்டதாகக் கூறி பத்து லட்சம் கையெழுத்து வேட்டையில் சிஹல உறுமயவும், ஜே. வி பியும் இறங்கி விடும்.

அதன் மூலப் பிரதி புத்தபிரானுக்கு முகவரியிட்டு, பிரித்தானியாவிற்குப் பிரதி அனுப்பினாலும் ஆச்சரியபபடுவதற்கில்லை ஏனெனில் அந்தளவு தூரம் சிஹல உறுமயவும், ஜே. வி. பியும் இனவாதத்தை கக்குகின்றன. அதன் ஒரு வெளிப்பாடே பத்து லட்சம் பேரின் கையொப்பத்துடன் கூடிய மகஜர் பிரித்தானியாவுக்கு அனுப்பியமையாகும்.

# ஆசிரியர் சேவை தரம்-1 பதவி

# வயது நிபந்தனையில் மாற்றம்

## 50 வயதை பூர்த்தி செய்யத் தேவையில்லை

(கொழும்பு)

ஆசிரியர் சேவை தரம் - 1 இற்கு பதவி உயர்வு பெறுவதற்கு 50 வயதைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவதற்கு கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவை தரம் 1 பதவி உயர்விற்கு தேவையான 20 புள்ளிகளை ஒருவர் பெற்றிருப்பினும் அவர் அப்பதவி உயர்வைப்பெற 50 வயதை பூர்த்திசெய்திருக்க வேண்டும் எனவிதிக்கப்பட்ட நிபந்தனையை நீக்க வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரை கோரியிருந்தமை தெரிந்ததே.

கல்விஅமைச்சர் அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இதுதொடர்பாக அமைச்சரவையில் அனுமதி பெறத்தான் ஆவன செய்வதாகவும் உறுதி அளித்துள்ளார். (உ-9)

## திறப்புவிழா

(கரணவாய்)

கரணவாய் அண்ணாசிலையடி வள்ளுவர் ச. ச.நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று பி.ப. 4.00 மணிக்கு நிலையத் தலைவர் பரமானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபைத்தலைவரும், ஈ. பி டி பி. உடுப்பிட்டித்தொகுதி அமைப்பாளருமான வல்லிபுரம் நடராசா நாடாவை வெட்டி நிலையத்தை திறந்துவைப்பார்.

(உ-27)

## மலையகதேசிய முன்னணி மறியல் போராட்டம்

(கொழும்பு)

மலையக தேசிய முன்னணி இம் மாதம் 28ஆம் திகதி மறியல் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது.

முக்கியமான மூன்று விடயங்களை முன் வைத்தே இப்போராட்டம் இடம்பெறவுள்ளது

மலையக தோட்டத்தொழிலாளரின் சம்பள உயர்வு, எரிபொருட்களின் விலை உயர்வு மற்றும் பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்திற்கு நியாயமான தீர்வு கோரியே இம்மாதம் 28 ஆம் திகதி இம் மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

(உ-9)

## தொழிலதிபராக விளங்கும் 12வயது இல.சிறுவன்

[கொழும்பு]

உலகில் அதிவயது குறைந்த தொழிலதிபராக கனேடியப் பிரஜையான இலங்கையர் கீத் பீரிஸ் [வயது-12] இனம் காணப்பட்டுள்ளார்.

சைடர்டெக் கம்பனியின் தலைவராக இருக்கும் இவர் நிறுவனத்தில் சகல செயற்படுகளையும் தனியே கவனிபபதுடன் இறுதி முடிவுகளையும் எடுக்கும் வல்லமை பெற்றுள்ளார்.

திறமைகளை பாராட்டி பல்வேறு பரிசில்களையும். விருதுகளையும் இச்சிறுவனான தொழிலதிபர் தட்டிக் கொண்டுள்ளார்.

இதேசமயம், வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையிலான கனேடியக் குழுவினரின் சீனவிஜயத்திற்கு பீரிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-3]

## தமிழர்களின் பிரச்சினை தேசிய விவகாரம்

### பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்தையும் மூடிமறைத்துக் கொண்டு ஐக்கியத்தை உருவாக்குவது வெறும் கனவாகவே இருக்கும்.

தமிழர்களின் பிரச்சினை ஒரு சிறுபான்மை இனத்தின் பிரச்சினையல்ல ஒரு தேசிய இனத்தின் விவகாரம் என்று பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி குமாரசிறி லியனகே தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படும் தீர்வே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்று அவர் கூறியுள்ளார்.

(உ-9)

தரம் 2 அ'பதவியுயர்வுப் பரீட்சை

## செயலக எழுதுவினைஞர் பதினாறு பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

சென்ற வருடம் இடம் பெற்ற பொது எழுவினைஞர் சேவைக்கான தரம் 2'அ' விற்கான பதவியுயர்வு பரீட்சையில் யாழ மாவட்ட செயலகத்திலிருந்து தோற்றிய 16 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

ரீ.அருள்ராஜ்,எஸ் சுதாகரன்,எம் முரளி, ஆர்.ஜானகி, ஆர். கோதர்ஷனா, பி ஆனந்தி.எஸ். கெங்கா, ரீ கலைச்செல்வி,என்.காயத்திரி,கே நடராஜா,ரீ தர்ஷினி,ரீ.அனுஷா,ரீ.நந்தினி, பி செந்தாமரை,எ. கௌரி, சீ சண்முகலிங்கம் ஆகியோரே சித்தியடைந்தவர்களாவர். (உ-12)

பாடசாலை

## மாணவர் மத்தியில் சமூக விழிப்பு கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஆதரவில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் விழிப்புணர்வு குழுவும் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் கருத்தரங்கொன்றை இன்று நடத்தவுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை, ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம்போன்ற பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலிருந்து ஒரு பாடசாலையில் 5 மாணவர்கள் என்ற ரீதியில் 90 மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கருத்தரங்கை டாக்டர் சங்கர் டாக்டர் நர்சிநார்க்கினியர்,ரவி. அருணகிரிநாதன் மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை சீ. ஜீ. ஜெயக்குமார் இணைப்பாளர் ஜோசப்பாலா ஆகியோர் நெறிப்படுத்தவுள்ளனர்.

பி ப. 3.00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகள் ஒன்று கூடி சமூக நெருக்கடிகளிருந்து மக்களை விடுவிக்கும் செயற்திட்டங்கள் பற்றி ஆராயவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## ஐரோப்பிய தூதுக்குழுவை தமிழ் முஸ்லிம்கட்சிகளின் கூட்டமைப்பு சந்தித்தது

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஐரோப்பியத் தூதுக்குழுவினரை 10 தமிழ் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு நேற்று சந்தித்துப் பேசியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை, மற்றும் இலங்கையின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில், போர்நிறுத்தம் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-9)

சர்வதேச இந்துமத குருமார்

## ஒன்றியம் அமைச்சர் டக்ளஸிற்குநன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் எனப் பெயர் மாற்றம் செய்து பதிவு செய்தமைக்காக சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நன்றி தெரிவித்துள்ளனர்

எமது நிறுவனம் சர்வதேச மட்டத்தில் நிலைபெற்று நின்று சேவையாற்றும் வகையில் அதனை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்து உதவியமைக்காக எமது இதயபூர்வமான, நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ந்து எமது நிறுவனத்துக்குத் தாங்கள் காட்டிவரும் ஆதரவும் பெருமதிப்பும் எமக்குப் பெருமை தருகிறது இதனால் நாம் மிகுந்த ஊக்கத்துடன் செயற்படமுடிகிறதுஎன்பதை தெரிவித்து தங்களுக்கும் தங்கள் திணைக்களத்திற்கும்தங்கள் அமைச்சுக்கும் நாம் நன்றிக் கடப்பாடு உடையோம் என சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(உ)

## பண்ணிசை வகுப்பு

(நல்லூர்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில், இசைவாணர் எம். இராசரத்தினம் ஆசிரியரால் தேவாரப்பண்ணிசை வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. சனி ஞாயிறு தினங்களில் மாலை 3 மணிக்கு இவ்வகுப்பு இடம் பெற்றுவருகிறது.

(உ-103)

## கசிப்பு ஒழிப்பில் பொறுப்பதிகாரி தீவிரம்

(துன்னாலை)

வடமராட்சியின் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாக புதிதாக நியமனம் பெற்றுள்ள றொகான் சஞ்சரியறாயு, கசிப்பினை ஒழிப்பதில் சமூகத்தின் அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பையும் நாடியுள்ளார்.

சமூக சேவையாளர்கள் தொண்டர் நிறுவனங்கள் கிராமசேவையாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடையே இதற்கான ஒத்தாசைகளை தனித்தனியே கோரியுள்ளதுடன்.

சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் கசிப்பு விற்பனை போன்ற தகவல்களை, பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்திற்கு நேரில் வந்தோ அல்லது 070 - 212393என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறும் கேட்டுள்ளார்.

(உ-41)

## கசிப்பு ஒழிப்பு கரணவாயில் தீவிரம்

(கரணவாய்)

கரணவாய் வடக்கு கலைமதி சனசமூக நிலையத்தினர் தமது நிலையத்திற்குட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தியைத் தடைசெய்ய புதிய தந்திரங்களை கையாண்டு வருகின்றனர்.

இதற்கென சனசமூக நிலைய நிர்வாகிகள் ஒன்றிணைந்து குழுவொன்றையும் அமைத்துள்ளனர்.

இக்குழுவினர், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோர் என இனம்காணப்பட்டவர்களிடம் சென்று, கசிப்பு உற்பத்தியில் ஈடுபடமாட்டோம என்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்துவ்துடன்,

அதனையும் மீறிச் செயற்படுபவர்களை எச்சரிக்கை செய்தும் வருகின்றனர்.

சனசமூக நிலையத்தினரின் இம் முயற்சிக்கு பெரிதும் ஆதரவு கிட்டியுள்ளது.

[உ-27]

கண்ணைக்கவரும் தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் செய்து தருபவர்கள்

**சாரங்கா நகைமாடம்**

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1503]


# வடக்குகிழக்கு இணைந்த சுயாட்சியே இனப்பிரச்சினைக்கு தீர்வாகும்

## ஐரோ.குழுவிடம் தமிழ்க் கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மற்றும் மலையக மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வு ஏற்படவேண்டுமென ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றக் குழுவிடம் தமிழ்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளதாக ரெலோ முதல்வர் என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றக் குழுவை நேற்று பத்துத் தமிழ்க் கட்சிகளும் கூட்டாகச் சந்தித்த போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசாங்கம் தகுந்த பதிலை வழங்கவில்லை என்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சி உடனான சமஷ்டி ஆட்சிமுறையொன்றே மக்களுக்கு வேண்டுமென்றும் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தி உள்ளதாகவும் ரெலோ முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)


மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1500]


## பஸ்ஸில் குண்டு மீட்பு

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றிலிருந்து சக்தி வாய்ந்த குண்டொன்று நேற்று பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று பி ப 3 30 மணியளவில் பஸ்ஸில் இருந்து மீட்கப்பட்ட 750 கிராம் எடையுடைய இக் குண்டு தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காக பஸ்ஸின் சாரதியும், நடத்துனரும் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ந-4)

## படகு கவிழ்ந்து நால்வர் பலி

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை நாசிவன் தீவு வாவியில் நேற்றுமாலை படகு ஒன்று கவிழ்ந்ததில் நான்குபேர் பலியாகினர். 13பேர் பயணம் செய்த இப்படகு பாரம் கூடியதால் கவிழ்ந்ததாகத் தெரியவருகிறது. [ந]

### சிவராத்திரி தின---

லுள்ள சகல சிவாலயங்களிலும் பூசைகள், கலாசார நிகழ்வுகள் இடம்பெறவும் பக்தர்கள் சென்று வழிபடவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இந்துப் பெருமக்கள் போட்டி பொறாமைகளை விட்டு, மனதை ஒரு நிலைப் படுத்தி இறைசக்தியைப் பெற்று தமக்கும் அயலவர்க்கும் நன்மைகளை செய்து மகிழ்வாக வாழ இறைவனை பிரார்த்திப்போம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### இலங்---

ரப்பை சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது அமைச்சர் கதிர்காமர் இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளருக்கு எடுத்துக் கூறியுள்ளதுடன் வடக்குக் கிழக்கில் இடம்பெற்றுவரும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினை காணும் பொருட்டு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொளப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றியும் விளக்கிக் கூறியுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

### நோர்வே. . .

இதுவே முதற்தடவையாகும்.

கனடாவில் வாழும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இலங்கை விவகாரத் தீர்வில் கனடா முக்கிய பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்று கோரியுள்ளார்கள்.

இதேவேளை நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்ரேலியா உட்பட பல நாடுகள் ஏற்கனவே ஆகரவு தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

### கீரிமலைக்கு--

இதற்கமைய 515ஆவது படைத்தரப்புடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

* பக்தர்கள் இன்றுபி.பகல் 1.00மணிதொடக்கம் மாலை 6.00மணிவரை தெல்லிப்பழை சேந்தான்குள சோதனைச் சாவடியூடாக ஆலயத்திற்கு செல்லமுடியும்.
* இராணுவச் சேதனை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள பிரதேசசெயலக ரீதியாக சோதனைச் சாவாடிகள் அமைக்கப்படும்.
* விசேட சிற்றுண்டிச் சாலை அமைக்கப்பட்டு குறைந்தவிலையில் சிற்றுண்டி வற்பனை செய்யப்படும்.
* நாளை வியாழக்கிழமை ஆலயத்திலிருந்து காலை6 30 மணிதொடக்கம் மாலை3.00 வரை திரும்புவதற்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது, (இ)

### சுதந்திர . . .

சங்கத் தலைவர், பல்கலைக் கழகஊழியர் சங்கப்பிரதிநிதி நிர்வாக உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதி மாணவர் ஒன்றியப் பிரதிநிதிஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் பொங்குதமிழ் பிரகடனமும் வாசிக்கப்பட்டது. (இ-43,106,104)

### உணர்வு . . .

ஆகிய சுலோகங்களுடன்பதாதைகளும் கட்டப்பட்டிருந்தது

பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் சமயக்குருமார் பொது அமைப்புக்கள் என சுமார் நாலாயிரத்திற்கும் மேற்பட்டோர் எழுச்சி நிகழ்வில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

பொங்கு தமிழ் எழுச்சியை ஆதரித்து பல்கலைக் சழக சமூகத்தவர்கள் பாடசாலை மாணவப் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மதகுருமார் மற்றும் அரசியல் தலைவர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

நிகழ்வின் இறுதியில் பல்கலைக்கழக சமூகத்தால் ''பொங்கு தமிழ்ப் பிரகடனம்'' வெளியிடப்பட்டது. (இ)


அதி நவீன கருவிகள் மூலம் ஒலிப்பதிவு செய்திடவும் வீடியோ, ஸ்ருடியோ, மணப்பந்தல் சேவைகளுக்கும்,

**மேகாஸ் வீடியோ அன் ஓடியோ**

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1495)



**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

சரத்குமார்.மீனா நடித்த

**ரிஷி**

10-30, 2-30 (ப. நே)

(புதிய வெளியீடு)

CD பிரதி

(கி/1482)


## கதிர்காமரின் கொடும்பாவி எரிப்பு

[மட்டக்களப்பு]

கிழக்குமாகாண பல்கலைக் சழகசமூகத்தினர் நேற்று நடாத்திய பொங்குதமிழ் எழுட்சிநிகழ்வில் பல்கலைக் கழகவளாகபிரதானவாயிலில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொடும்பாவி கட்டப்பட்டிருந்தது.

எழுச்சிநிகழ்வின் இறுதியில் சுதிர்காமரின் கொடும்பாவி அங்கிருந்து இழுத்துச்செல்லப்பட்டு சிதை தீமூட்டிஎரிக்கப்பட்டது.

இதேவேளை இந்நிகழ்வில் கலந்து கொண்டதமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா புலிகளைதடை செய்ய வேண்டாமெனக் கோரும் மகஜரில்கையொப் பமிட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். [இ]

## யாழ். மாநகர அணையாளர் விவகாரம்
# தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகர ஆணையாளரை உடனடியாக மற்றுமாறு தொழிற் சங்கங்களின் கோரிக்கைகள் வலுத்துவரும் இவ்வேளையில் நேற்று சில தொழிற் சங்கப் பிரதிநிதிகள் வட பகுதி புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து நிலமைகளை எடுத்துக் கூறியுள்ளனர்

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய ஆணையாளரால் யாழ் மாநகர சபையின் சுகாதார சேவை ஸ்தம்பிக்கும் நிலையிலுள்ளதாகவும், சுகாதார ஊழியர்கள் பழிவாங்கப்படுவதாகவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து தாம் சுமுகமான ஓர் நிலையை ஏற்படுத்துவதாக உறுதியளித்துள்ளார். [ந]

### சிவராத்திரி--.

யோர் ஆகரவு தெரிவித்து சிவராத்திரி தினத்தில் சமாதானத்திற்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்து சமயப்பேரவைத் தலைவர் அருட்கவி சீ.வினாசித்தம்பி, செயலாளர் சி.சக்திகிரீவன் ஆகியோரினால்இந்த அறிக்கை விடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

சிவராத்திரி தினமானஇன்று எமது பேரவையினால் நடத்தப்படும் சமாதானப்பிரார்த்தனை முழுப்பலனையும் அளிக்கும் வகையில் அசுரர்கள் விலகவும், தேவர்கள் வந்து அணையவும் இன்று மாலை சகல இந்து ஆலயங்களிலும் உள்ள கண்டாமணியை ஒலிக்கச் செய்து சமாதானத்திற்கான நாதத்தை எழுப்பி உலகிற்குக் காட்ட அனைத்துஆலயபரிபாலன சபையினரும், தர்மகர்த்தாக்களும் சமய நிறுவனங்களும், ஆலயசிவாச்சாரியார்களும் முன்வர வேண்டும்.

இன்றுநடைபெறும்பிரார்த்தனையில் மக்கள் ஆலயங்களுக்குச்சென்று பூஜைவழிபாடுகளிலும், பிரார்த்தனைகளிலும் முழுமையாகப்பங்குபற்றுமாறும் யுத்தத்தினால் இறந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக நாளை வியாழக்கிழமை விசேட பிரார்த்தனைகளைமேற்கொள்ளுமாறும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (வ)

## சமாதானத்தை வலியுறுத்தி திருமலையில் ஹர்த்தால்

திருகோணமலை இணைந்த பல்கலைககழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று திருகோணமலை மாவட்டத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தேஇக்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளைஇக்ஹர்த்தால் காரணமாக திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாக இருந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-4)

## மட்டு. பல்கலையில் ஒலித்த பொங்கு தமிழ் பிரகடனம்

மட்டக்களப்பு பல்கலைக் கழகசமூகத்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சிநிகழ்வில் வாசிக்கப்பட்ட பொங்கு தமிழ் பிரகடனம் வருமாறு.

நாம் ஆயுதவெறி பிடித்த பித்தர்களல்ல சமாதானத்தினை நேசிக்கின்ற மனித நேயமுள்ள, மனித உரிமைகளை மதிக்கின்ற மானிடவர்க்கமாகும். நாம் நேசிக்கின்ற சமாதானம் எமது அபிலாசைகளாகியசுயநிர்ணயஉரிமை, மரபுவழித்தாயகம் தமிழ் மக்கள் தனித்துவமானதேசிய இனம் என்பவற்றை அங்கீகரிக்கின்றதாக இருக்கவேண்டும். இச் சமாதானத்தினை அடைவதற்காக எமது முழுச் சக்தியையும் பயன்படுத்தச் சித்தமாகவுள்ளோம் பொங்கு தமிழ் எம்து உள்ளக்குமுறல் இது அடங்கும்வரை நாம் பொங்கிக் கொண்டேயிருப்போம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### ஆதாரம் காட்டி பெறவும்

பொன்னுத்துரை பிலோமினா 54/11 சுவாமியார் வீதி கொழும்புத்துறை என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி வலம்புரிக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### ஊரடங்கு

அதிகாலை 4.00மணி வரை அமுலில் இருக்குமென யாழ். பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-4)

### விமான விபத்து

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத் தளத்தில் இருந்துபொருட் களைஏற்றிச்சென்ற விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது;

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.